- Nunaviloor.ka.visayarathinam. (2017). pazhanthamil noolgalil parathamai. *pathivigal* , 1-2.
- PINGALAMUNIVAR. (1917). *PINGALANTHAI(PINGALANIGANDU).* CHENNAI: MATHARAAS RIPPAN ACHIYANTHARASALAI, 87,THAMBUCHETTI VITHI.
- SOMASUNDHAR, M. (1981). *MANOTHATHUVA MARUTHUVAM.* CHENNAI: NARMADHAPATHIPPAGAM.
- SOMASUNDHARANAR, P. (1955). *KURUNTHOGAI.* CHENNAI: THIRUNELVELI SAIVA SITHANTHA NOORPATHIPPUKKAZHAGAM.
- Su.A.Annaiyappan. (2016). Thozhiyin manithaniya panpugal. *keetru.com* , 1-2.
- VENGADASAMINADAR, N. (1965). *AGANANOORU.* CHENNAI: THIRUNELVELI SAIVA SITHANTHA NOORPATHIPPUKKAZHAGAM.


******************

# காப்பியங்கள் : கற்றலும் கற்பித்தலும் Epics : Learn and Educate


## முனைவர் ம. ஷீலா | Dr. M. Sheila

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, இராஜேஸ்வரி வேதாசலம் அரசு கலைக்கல்லூரி, செங்கல்பட்டு. கைப்பேசி :9677940619, மின்னஞ்சல் : lalithampika1968@gmail.com, Orchid No : https://orcid.org/0000-0002-8587-1985


### ஆய்வுச்சுருக்கம்


மனித வாழ்வியலைப் பற்றிப் பேசுவன இலக்கியங்கள். நாம் வாழும் வாழ்க்கையை எடைபோடும் தராசு என்றும் இலக்கியங்கள். அவற்றுள், பொருள்தொடராய் அமையும் காப்பியங்கள் விளக்கமாய், விரிவாய் வாழ்க்கைக்குத் தேவையான பண்புகளையும், நிகழ்வுகளில் எங்ஙனம் செயலாற்றினால் என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பன பற்றியும் காட்சிப் படமாகக் காட்டுகின்றன. வள்ளுவர் கூறும்,

"செய்தக்க அல்ல செயக் கெடும்
செய்தக்க செய்யாமை யானும் கெடும்"(466)

என்பதற்கு இலக்கியமாக அமைவதால் வாழ்வின் வழிகாட்டியாகவும் அமைகின்றன.

நாம் காப்பியங்களைக் கற்கும்போது ஆரம்பத்தில் நம் உணர்வுகளுக்கு வடிகாலாய், இன்பத் துய்ப்பிற்காகத்தான் கற்க ஆரம்பிக்கின்றோம். ஆனால் அது துன்ப மறப்பிற்கான தாங்குவதற்கான ஊன்றுகோலாக அமைகின்றது. வழக்கில் ஒன்று கூறுவார்கள் - சீதை, சந்திரமதி அனுபவிக்காத துன்பங்களா...? பாஞ்சாலி படாத பாடா..? பெண்ணிய நோக்கில் பார்க்கும்போது அடிமைத்தனத்தை ஊக்குவிப்பது போல் தோன்றினாலும், துயர்கள் இல்லாத வாழ்க்கை இல்லை; 'இடுக்கண் வருங்கால் நகுக' என்றாற் போல் துயர்களில் சோர்ந்து செயலற்று விடாமல் அதிலிருந்து மீள முயல வேண்டும்; முயற்சியே உயிர்ப்பு; வாழ்க்கை என்பதை உணர்த்தும் பாங்காகக் கொள்ள வேண்டும்.

காப்பியங்கள் அறம், பொருள், இன்பம் வீடெனும் நாற்பொருள்கள் பற்றிப் பேசுவதால் பெரும்பாலும் முழுவாழ்க்கை பற்றிய சித்திரமாக அவை அமைகின்றன. கதை வடிவில் வாழ்வியலை உணர்த்துவதால் சுவையுடன் படிக்க, கேட்கச் செய்வதுடன் செயல்படவும்

தூண்டுகின்றன. பாத்திரங்கள் பெரும்பாலும் அடிக்கடி வருவதால் அவர்களின் பண்பு விளக்கங்கள், உணர்வுப் போக்குகள் எளிதில் புரிகின்றன. பாத்திரங்களுடன் ஒன்றியும், படர்க்கை நிலையிலும் நின்று அவற்றை அனுபவிப்பதால் அவர்களின் உணர்வுகளை உணர்வதால் செய்தக்கன, செயத்தகாதன புரிவதால் வாழ்வின் இடர்களில் 'மாற்றி யோசிக்க' உதவுகின்றன.

காப்பியங்கள் பல்கலைக்கழகமென பல்பாத்திரங்கள், நிகழ்வுகள் எனப் பரந்து காணப்படினும் ஆழ உழுவது போல கருத்தை ஆழமாகவும் உணர்த்துவதால் வாழ்க்கையைப் புரிய வைக்கின்றன.

**Abstract:**

Literature that talks about human life. These can be said to be the scales that weigh the life we live. The epics that do not follow the subject illustrate and show the characteristics that are necessary for detailed life. Literature is the visual images of how to act on the events and how to deal with the consequences. They also serve as a guide to life as the literature suggests that the cultivator is not adaptable but inactive and ineffective.When we learn epics we begin to drain emotion for pleasure but it is also a crutch for forgetfulness, suffering and endurance. One would say are the suffering not experienced by Sita and Chandramathy? Sing without Panchaali? While it may seem like promoting slavery when viewed from a feminist perspective, there is no life without tragedies.

'Idukan Varungal Naguga' should not be active in misery and should try to recover from it.Effort is life. Life should be a way of realizing that, Epics speak of four elements of Virtue,meaning,pleasure and Moksham and thus depict life as a whole.Realizing life in the form of a story stimulates reading, listening and acting with taste. The characters come so often, it is easy for us to travel with their character descriptions and emotions. Their character descriptions make it easier for us to travel with emotional tendencies. Characters can feel their feelings and pleasures as they come often. They provide an opportunity to experience our world even though natural descriptions sometimes seem to restrict the state we feel their beauty and richness through natural paintings. We live well in the world only with nature. If we all had an emotional connection with the natural world, would it be like destroying the forest unnecessarily or grieving that the rain did not come?

Isn't it unnecessary that the children would lose the natural life we enjoyed if we realized these and realized them to the students? Epics, because the intrinsic elements we spoke of arn and Educate.

**திறவுச்சொற்கள் (Keyword):** காப்பியங்கள், கற்றல், கற்பித்தல், நிலையாமை, அரிச்சந்திரன், கேசி, சுவை, உற்றுழி, வருணனை.

**முன்னுரை**

நிலவிற்கே மனிதன் சென்றானாயினும் உலக வாழ்க்கையை அவன் இன்னும் முற்ற முழுவதும் புரிபடா நிலையிலேயே உள்ளான். இதனைப் போக்கும் பான்மைய இலக்கியங்கள். கதைவடிவில் சுவையாய் அவனுக்கு வாழ்க்கையைக் கற்றுக் கொடுக்கின்றன; வாழும்

முறையை உணர்த்துகின்றன. அவ்வகையில் காப்பியங்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்கின்றன. இவை வாழ்க்கையின் பல் நிகழ்வுகள், பல் பாத்திரங்கள், சூழல்கள் என ஒரு பிரமிப்பை அவனுக்குள் உருவாக்கினாலும் வாழ்க்கையை உணர்த்தி வாழச் செய்வனவாம். காப்பியங்கள் கற்றலும் அதனைப் பிறர் உணரக் கற்பித்தலும் சிறப்புடைய நிலைகளாக உள்ளமையின் அவற்றைப் பற்றிக் காண்போம்.

**1.காப்பியங்கள்**

பொருள் தொடர் செய்யுட்களாக அமைவன காப்பியங்கள். இவை அளவால், பொருளால் பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள் என்னும் பகுப்புகளையும் உடையன. 'வாழ்த்து, வணக்கம் வருபொருள் கூறுவதாய், அறம், பொருள், இன்பம், வீடெனும் நாற்பொருள்களை மொழிவதாய், தன்னிகரில்லாத் தலைவனையுடையதாய், மலை, கடல், நாடு, நகர், பருவங்கள், சந்திர சூரியர்கள் என்னும் இரு சுடர்களின் தோற்றங்களை மொழிவதாய், திருமணம், முடிசூடல், பொழில் நுகர்தல், புனல் விளையாடல், கள்ளுண்டு களித்ததல், நன்மக்களைப் பெறுதல் ஊடல், புலவியென இல்லறத்தில் மகிழ்தல், மந்திரம், தூது, செலவு, போர், வெற்றி போன்ற புறவாழ்வுகளை உடையதாய், சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் போன்ற பகுப்புகளில் ஒன்றையுடையதாய் எண்வகையான மெய்ப்பாடுகளும் விளங்க, ஒருவகையாகவும் பலவகையாகவும் பாடல்கள் அமையப் பாடப்படுவனவே பெருங்காப்பியங்கள்; மேற்கூறிய உறுப்புகளில் சில கூடியோ குறைந்தோ வந்தாலும் தவறில்லை; அறம் முதலாய நாற்பொருட்களில் ஒன்று குறையினும் அது சிறு காப்பியமே' என்றும் காப்பிய இலக்கண நிலைகளைத் தண்டியலங்காரம் கூறும் (தண்டியலங்காரம்,பொது.8). பிற்காலத்தவரும் காப்பிய இலக்கண வரையறை செய்துள்ளனர். "காலம் பழமையடைந்தாலும் நூல் புதுமை அழகோடு விளங்கும்படி காப்பியம் அமைய வேண்டுமென"" (கி.வா. ஜகந்நாதன் தமிழ்க்காப்பியங்கள்,ப.271); "எல்லாக் காப்பியக் கதைகளும் மனித சமுதாயத்தின் ஒரு முக்கியச் செயலை நோக்கியே விரியும். இங்கு வருகின்ற மாந்தர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு அருஞ்செயலின் குறியீடுகளாகவே அமைவர்" என காசிராஜனும்; "காப்பிய இலக்கியங்கள் நாகரீகத் தொடக்கக்கால இனமரபுக் குழுவினரின் கடவுள் வழிபாட்டிலிருந்துதான் தோன்றியிருக்க வேண்டுமென" ஜான் கிளார்க்கும் கூறக் காணலாம் (இரா. காசிராஜன், தமிழ்க்காப்பியங்கள், பக்.7 ,23).இவ்வாறு பலபடப் பேசப்படினும் மனித மன உணர்வுகளின் பல்கோணங்களை விளக்கமாய், விரிவாய் உணர்த்தும் வாழ்க்கையின் வெளிப்பாடுகள் காப்பியங்கள் எனலாம். காப்பியங்கள் வாழ்க்கைப் பற்றிப் பேசுவனவாதலின் காப்பியங்களைக் கற்றலும், கற்பித்தலும் முக்கிய இடம் பெறுகின்றன.

**2. காப்பியங்களைக் கற்றல்**

கற்றல் என்பதும் ஒரு வாழ்வியல் பயிற்சி முறையே எனலாம். ஏனென்றால் கற்றலால் பொருளை, மனிதர்களை, உலகை, இறையை அறிந்து கொள்ள முயலுகின்றோம். கற்றல் என்பது வளர்ச்சியின் வெளிப்பாடு. அவ்வகையில் வாழ்க்கையை உணர்த்தும் காப்பியங்களைக் கற்றலும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன.

2.1 சூழல் உணர்தல் என்பது இலக்கியங்கள் யாவற்றுக்கும் உரிய பொதுவான கற்றல் நிலை. எந்தக் காலச்சூழலில், தேவையின் அடிப்படையில் அவ்விலக்கியம் எழுந்தது என்பது அவ் இலக்கியத்தை உள்ளபடி உணரத் துணை செய்யும் கூறாம். சான்றாக, அவதாரமாய இராமன் மனித இயல்பிற்கேற்பச் செயல்பட்டமையை வான்மீகி இயல்பாகக் காட்ட, கம்பரோ, காலப்போக்கின் வளர்ச்சி மாற்றங்களால் தெய்வீகத் தன்மைக்குக் குறைவு வராத நிலையில்

விடுபாடுகள் செய்துள்ளார்; காரணங்கள் கூறியுள்ளார். இராமாயணத்தில் இராமர் பட்டாபிஷேகத்திற்குப் பின்னுள்ள செய்திகளைப் பாடாமையைக் கூறலாம். ஒட்டக்கூத்தர் பாடியதால் பாடவில்லை என்றொரு காரணம் கூறப்படினும் இராமனைப் பாடுகையில் தெய்வபாவம் தோன்றவே பாடியுள்ளார். வாலி தன் மீது அம்பு விட்டவர் யாரென அறிய முயன்று அம்பைப் பார்க்கையில்,

"மும்மைசால் உலகுக்கெலாம் மூலமந்திரத்தை முற்றும்

தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தானே

இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை 'இராமன்' என்னும்

செம்மைசேர் நாமம் தன்னை கண்களின் தெரியக் கண்டான்"(கம்ப., 4013).

மட்டுமல்ல காவியச்சூழல் உணர்தல் அக்காப்பியக் கால மக்களின் உணர்வுப் போக்கினைப் பண்பாட்டு நிலைகளை உணர வழி செய்கின்றது.

2.2 காப்பியங்கள் பிரம்மாண்ட வடிவுடையனவாதலின் அவை கூறும் செய்தி, கரு என்னவென்பதை அறிதலும் நம் கற்றலை எளிதாக்கும்.

2.3 இலக்கியங்கள் சுவைப்பிற்கு உரியன; மக்கள் துயர் போக்கிற்கும் வாய்ப்புமாதலின் உணர்ந்து படித்தல் சிறப்பு. எனவே கவிதைகளைப் படித்தல், சொற்பொருள் உணர்ந்து மீண்டும் மீண்டும் கற்றல் என்பது அதன் சொற்பொருள் நயங்களை உணர வழிவகுப்பதுடன், காப்பிய உணர்வில், கருத்தில் இயல்பாய்ப் பயணிக்கவும் உதவுகின்றது.

2.4 காப்பியங்கள் எண்சுவைகட்கு இருப்பிடம். அணிகள் அழகுபெறச் செய்யப்படுவதாதலின் அவற்றை உணர்ந்து கற்றல் காப்பியக் கற்றலின் முடிமணியாம். இது தமிழின் வளத்தைக் காலப்போக்கில் ஏற்பட்ட இலக்கிய இலக்கண உலகின் மாற்றங்களைத் தெளிவாகக் காட்டும் கண்ணாடியுமாம்.

2.5 காப்பியங்கள் வாழ்க்கையைப் பேசுவன. பல பாத்திரங்கள், சூழல்கள் வருவதால் அவற்றை உணரப் புரிபடா மனித இயல்புகள் புரிபடும் வாய்ப்பாக இருப்பதால் நிகழ்வுகளில், சூழல்களில் பாத்திரங்கள் செயல்படும் நிலைகளை அறிதல் வாழ்வில் என்றாவது உற்றுழியாய் நமக்கு உதவும் அல்லது பிறர் வாழ்வில் நிகழின் அவருக்கு ஆறுதல் கூற, வழிப்படுத்த அவர்களை அச்சூழல்களிலிருந்து வெளிக்கொணர உதவுமாதலின் காப்பியக் கல்வியில் பாத்திரங்களைத் திறனாய்வுநிலையில் கற்றல் வாழ்வியலைப் புரியவும் உதவும். இவ்வாறு காப்பியங்கள் கற்றல் வாழ்வியலைப் புரிய உதவுகின்றது

**3.காப்பியங்களைக் கற்பித்தல்**

காப்பியங்கள் கற்றலின் பெரும்பான்மைக் கூறுகள் காப்பியங்கள் கற்பித்ததலுக்கும் பொருந்தும்.

3.1 காப்பியங்கள் கற்க வேண்டியதன் அவசியத்தை முதலில் புரிய வைக்க வேண்டும். காப்பியங்கள் என்பன மனிதவாழ்வின் முழுநிலையை அல்லது வாழ்வின் பல சூழல்களைப் பற்றிப் பேசுவன; காலச்சூழல்களை அறியலாம். காலப்போக்கில் வளர்ந்த கருத்துமாற்றங்களை, உணர்வு நிலைகளை, பண்பாட்டு பான்மைகளை உணர முடியும்.

சுவைநிலையில் வாழ்வை விளக்குவன ஆதலின் வாழ்வில் கைக்கொள்ளத் தக்க அறங்களைப் பசுமரத்தாணியாய்ப் பதியும்; பழக்கமாய் மாறும். ஆயின் இவற்றை வெளிப்படக் கூறாமல் வாழ்வியல் பற்றி அறிய உதவும் ஊன்றுகோல் என்றும் கூறலாம். இவை யாவுமே காப்பியங்களைக் கற்கும் ஆர்வத்தைத் தூண்டுவதால், கற்பித்தல்வழி அவர்களை ஈடுபாட்டுடன் ஈடுபடச் செய்யலாம்.

ஒழுக்கமே உயர்வைத் தருமாதலின் என்றும் தளர்வுறாது அதனைக் கைக்கொள்ளுதல் வேண்டும். புகழுடைய வாழ்விற்கு மட்டுமன்றித் திருப்தியான வாழ்விற்கும் மனிதனாம் தகைமைக்கும் அதுவே அடிப்படையாகும். இதனை,

" நன்றி யறிதல் பொறையுடைமை யின்சொல்லோ
டின்னாத எவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியோ
டோப்புர வாற்ற வறித றிவுடைமை
நல்லினத் தாரோடு லிவையெட்டுஞ்
சொல்லிய ஆசார வித்து"(ஆசாரக்கோவை, 1).

என நீதியாகக் கூறினால் ஏற்றல் அரிது; கேட்பார்; ஆனால் நாளடைவில் மறப்பார் எனலாம். ஆனால் காப்பியக் கதையாய் கூறின் மறவாராம். வாய்மையின் உயர்ந்த அறம், வாழ்வு இல்லை. இதனை அரிச்சந்திர புராணம்வழி விளக்கலாம். வாழ்க்கையில் பல துன்பங்கள் அடைந்த போதும், மனைவி, மகன், தான் என யாவும் இழந்து அடிமைப்பட்டுத் துயருற்ற போதும் வாய்மையை மறக்காமல், மகனை இழந்து, மனைவியைத் தன் கையால் கொல்ல நேர்ந்த போதும் பொய் கூறாமல் வாய்மையில் உறுதியுடன் நின்ற நிலைகளை, பின்பு அவர் பெற்ற பேறுகளைக் காண்கையில் துன்பம் என்பது வாழ்க்கையில் இயல்பான விஷயமே. அதற்காக நம் கொள்கைகளைக் கைநழுவ விடக்கூடாது. துயர்கள் நம்மை சோதிக்கும் படிக்கட்டுகளே. அவற்றைக் கடந்தால் விழுமிய நிலை அடையலாம் என்பதை உணர்த்துவதாக விளக்கலாம்.

"பதிஇ ழந்தனம் பாலனை இழந்தனம் படைத்த
நிதிஇ ழந்தனம் இனிநமக் குளதென நினைக்கும்
கதிஇ ழக்கினும் கட்டுரை இழக்கிலோம் என்றார்
மதிஇ ழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்"(அரிச்சந்திர., 130)

என பாடலாய் விளக்கின், கற்பித்தால் மறவாராம். அரிச்சந்திரன் நாடகம் கண்டு வாய்மையே கைக்கொண்ட மகாத்மாவின் மேன்மைகள் நாமறியாததல்ல....வழக்கமாக வாழ்வை மலர்ச்சியாக்க அடுத்த தலைமுறைக்குக் காரணமாய் விளங்கும் காமவுணர்வை சிற்றின்பம் என பழிப்பது வழக்கம். ஆனா அளவுடனென இருந்தால் எதுவும் கேடில்லை. 'களவும் கற்று மற' என்றாற்போல சிற்றின்பத்தை உணர்ந்து அனுபவித்து அதனைக் கடத்தலே மனித வாழ்வை 'வையத்துள் வாழ்வாங்கு வாழச்' செய்யும் என்பதை சீவகசிந்தாமணிவழி விளக்கலாம். சீவகன் தந்தை சச்சந்தனுக்கு விசயை என்னும் ஒரே மனைவிதான். ஆனால் சச்சந்தனோ காமத்தில் ஆழ்ந்து ஈடுட்டு எழமுடியாமல் வீழ்ந்து விடுகின்றான்.

"அசைவிலாப் புரவிவெள் ளத்தரிஞ் யன்குலத் துட்டோன்றி
வசையிலாள் வரத்தின் வந்தாள் வான்சுவை யமிர்தமன்னாள்
விசையையைப் பிரித லாற்றேன் வேந்தனீ யாகி வையம்
இசைபடக் காத்தல் வேண்டுமிலங் குபூண் மார்பவென்றான் " (சீவக. நாமக.172)

ஒரு மனைவியிடம் துய்த்தும் அடங்காதவனாய் தன் ஆட்சி பொறுப்பைத் தன் அமைச்சன் கட்டியங்காரனுக்கு வழங்கித் தன் ஆட்சி அழிவுக்கே காரணமாகின்றான். ஆனால் மகனாகிய சீவகனோ அழகுடன் அருங்குணங்களுடைய சமுதாயத்தில் உயர்நிலையுடைய எட்டுப் பெண்களை மணந்தான். இல்லறமும் நல்லறமாகவே இருந்தது. காமம் துய்த்தார்; ஆனால் அதிலேயே ஆழ்ந்து விடவில்லை. எனவே உரிய காலத்தில் வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்தவராய் உறுதியுடன் உலகியல் வாழ்விலிருந்து விடுபட்டவராய் வீடுபேற்றிற்கான வழியைத் தேடி உயர்நிலை அடைந்தார். இக்காப்பியச் செய்திகள் வாழ்வை, உறவுகளை வெறுப்பது மட்டும் வாழ்க்கையன்று. வாழ்ந்து மேனிலை அடைய வேண்டும் என்பதையே காட்டுகிறது.

"உழவித்தி உறுதி கொள்வார் கொண்டுய்யப் போகல் வேண்டித்
தொழுவித்தி அறத்தை வைத்துத் துளங்கிமி லேறு சேர்ந்த
குழவித்தண் திங்க ளன்ன இருக்கைய னாகிக் கோமான்
விழவித்தாய் வீடு பெற்றான் விளங்கிநால் வினையும் வென்றே""(சீவக. முத்தி.516).

இல்லறமே கைக்கொள்ளத் தக்கதாதலின் 'பிறன்மனை நோக்காப் பேராண்மை" வேண்டும். அதில் வழுவின் 'கரணம் தப்பின் மரணம்' என்றாற்போல் குலமும் தன்னுடன் அழியும். இந்த வாழ்வியல் உண்மையை

"அறம்புகழ் கேண்மை பெருமைஇந் நான்கும்
பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா-பிறன்தாரம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்று
அச்சத்தோ டிந்நாற் பொருள்"
"காணின் குடிப்பழியாம் கையுறின் கால்குறையும்
மாணின்மை செய்யுங்கால் அச்சமாம்-நீள்நிரயத்
துன்பம் பயக்குமால் துச்சாரி நீகண்ட
இன்பம் எனக்கெ னைத்தால்கூறு" (நாலடி. 82, 84)

என பலமுறை அறம் கூறினாலும் அசையாதவர்களைக் கூட கம்பராமாயணம் கற்பித்தல் வழி உணரச் செய்யலாம். இதனைக் கம்பராமாயணத்தில் வரும் இராவணன் அழிவாலும் கற்பிக்கலாம். இராவணன் கல்வி ,கலை, வீரத்தில் தன்னிகரற்றவன்தான். ஆனால் பிறன்மனையாள் மீது கொண்ட ஆசையால் வீழ்ந்து விட்டான்.

"சினத்தொடும் கொற்றம் முற்றி இந்திரன் செல்வம் மேவி
நினைத்தது முடித்து நின்றேன் நேரிழை ஒருத்தி நீரால்
எனக்குநீ செய்தக்க கடனெலாம் ஏங்கி ஏங்கி
உனக்கு நான் செய்வதானேன் என்னின் யார் உலகத் துள்ளார்"(கம்ப.9224)

பிறர்மனை விரும்பியோர் இழிவை, இழப்பை இதைவிட தெளிவாய்க் காட்சிப்படுத்த முடியாதன்றோ...? பிறர்க்குத் தீங்கு செய்தல் அது தற்காப்பிற்காக என்றாலும் துன்பத்தையே தரும். இதனையே காப்பிய கதைவழி குண்டலகேசி வாழ்க்கைவழி கற்பிக்கத் தெளிவாய் உணர்வர். வணிக மகளாய பத்திரை கள்வனாய காளனைக் கழுவேற்றச் செல்லும் நிலையில் கண்டு காதலுற்று பெரும் முயல்வுக்கிடையில் மணக்கின்றாள். ஒரு நாள் ஊடலில் கள்வனல்லவா என்று கூற, அவள் மீது வெறுப்புடன் மலைமேல் அழைத்துச் சென்று கொல்ல முயல்கின்றான். இதை உணர்ந்த பத்தரையோ, 'கணவனே கண்கண்ட தெய்வமாதலின் அவனை வலம் வந்து வணங்குகிறேன்' என்று வலம் வருகையில்

அவனைக் கீழே தள்ளி விடுகிறாள். தன்னைக் கொல்ல முயன்றவனைத் தான் கொன்றாள். ஆயின் மனச்சான்று உறுத்தத் துறவியான நிலையை விளக்கின் உணர்வாராம்.

வாழ்வின் நிதர்சனம் காட்டல் - தன் மகன் கொலைப்பட மணிமேகலையே காரணம் என வன்மம் மிகக் கொண்டு பழிவாங்கிய அரசிக்கும் நலம் செய நினைந்து உலகின் நிலையா நிலை உணர்த்த முயலும் மணிமேகலையோ,

"உடற்கு அழுதனையோ உயிர்க்கு அழுதனையோ
உடற்கு அழுதனையேல்உன்மகன் தன்னை
எடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரே
உயிர்க்கு அழுதனையேல் உயிர்புகும் புக்கில்
செயப்பாட் டுவினையால் தெரிந்துணர் வரியது
அவ்வுயிர்க் கன்பினை யாயின் ஆய்தொடி
எவ்வுயிர்க் காயினும் இரங்கல் வேண்டும்" (மணிமே.சிறைவிடு.73-79).

எனக் கதை நிகழ்வோடு கூறின் எளிதில் புரிந்து கொள்வர்.குண்டலகேசி கூறும்,

"பாளையாம் தன்மை செத்தும் பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும் காமுறும் இளமை செத்தும்
மீளுமிவ் இயல்பு மின்னே மேல்வரு மூப்பு மாகி
நாளுநாள் சாகின்றமால் நமக்குநாம் அழாததென்னோ" (குண்ட.9).

வினையின் பயனை அனுபவித்தே ஆக வேண்டும் என்னும் வாழ்வியல் நிலையைத் திருடனெனப் பொய்பழி சாட்டப்பட்டுக் கொலையுண்ட கோவலன் நிலையாலும் உணர்த்தலாம் (முன்வினைப்பயன்).

தலைமை நிலையில் இருப்பார் மதிப்பு, மரியாதை, புகழ் பெறுதல் இயல்பே. ஆயின் அவர் தம் விருப்பின்படி தான் நடப்பின அது கேடு தருவதாம். இதனையே வள்ளுவரும்,

"அல்லற்பட் டாற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"(555).

இதனை இவ்வாறு நீதியாகக் கூறுவதைவிட சிலப்பபதிகார பாண்டிய மன்னன் நிலைவழிக் கற்பிக்க எளிதின் விளங்கும். தேவியின் சிலம்பு திருடிய கள்வனைப் பிடித்துள்ளேன் என்கவும், ஆராயாது மன்னன்,

"ஊர் காப்பாளரைக் கூவி ஈங்கென்
தாழ்பூங் கோதை தன்கால் சிலம்பு
கன்றிய கள்வன் கைய தாகில்
கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கென"(சிலப்.கொலைக்.150-153).

எனக்கதையின் முன், பின் சூழல் காட்ட எளிதில் விளங்கும். தாம் தலைமை நிலையடைகையில் மேற்கொள்ளத் தக்க நெறியும் புலனாகும். இவ்வாறு வாழ்வியல் உணர்த்தும் பாங்கினதாய்க் காப்பியங்கள் உள்ளதைக் கற்பித்தால் மனிதன் மனம் பண்பட, நல்லொழுக்கம் கைக்கொள்ள, வாழ்வின் சூழல்களில் உற்றுழியாய் உதவ, புரிய காப்பியங்கள் துணையாவதைப் புரிய வைக்கலாம்.

3.2 மாணவர்களுக்கு நாம் கற்பித்தல் ஒருவகையாயின், அவர்கள் தாமே தம் முயற்சியால் படிக்கும் நிலையை அவர்கள் உணரும்படி கற்பிக்க வேண்டும்.

"கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல-தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய றப்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து "(நாலடி.135).

என்றாற்போல சுவைபெறக் கற்கத் துணைசெய் நிலையில் பாக்களைப் படிக்கும் முறையைப், பொருள் தெரிந்து கற்கும் நிலையை எவ்வாறு பெறல் வேண்டும் போல்வனவற்றையும் கற்பிக்க வேண்டும். இது பிற காப்பியங்களைக் கற்கும் ஆர்வத்தைத் தூண்டுவதோடு தாமே சுவைப்பிற்கும் வழிவகுக்கும். "பசித்தவனுக்கு மீனை உண்ணக் கொடுப்பதைவிட மீன் பிடிக்கக் கற்றுக் கொடுப்பது சிறந்தது" எனும் பழமொழி இங்கு நினையத்தக்கதாம் (சீனப்பழமொழி - விக்கி மேற்கோள்கள்).

காப்பியம் கற்பிப்பில் ஒப்பீட்டுக் கற்பித்தலும் சுவையை, ஆர்வத்தைத் தூண்டுவதாம். சிலப்பதிகாரம் கற்பிக்கையில், மதுரைக் காண்டம் - புறஞ்சேரி இறுத்த காதையில் வானவர் தங்குகின்ற மதுரையை வலம்வரின் நலம் விளையுமென கவுந்தியடிகள் , கோவலன், கண்ணகி முதலானோர் அகழியைச் சுற்றிவர நீங்கள் மதுரைவரின் கேடே விளையும் எனவே வாராதீர் எனக் கொடிகள் அசைந்தன என்பார் இளங்கோ.

"போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரலென் பனபோல் மறித்துக்கை காட்ட"(சிலப்.புறஞ்.189-190).

இங்குக் கொடிகள் 'வராதே' எனக் கைகளை ஆட்ட, கம்பராமாயணத்திலோ, திருமகள் என்னிடம் உள்ளாள் 'விரைந்து வருக' எனக் கையசைத்தனவாம்.

"மையறு றேலரின் நீங்கி யான்செய் மா தவத்தின் வந்து
செய்யவள் இருந்தாள் என்று செழுமணிக் கொடிகள் என்னும்
கைககளை நீட்டி அந்த கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை ஒல்லைவா என்றழைப்பது போன்ற தம்மா"(கம்ப.480).

சிலம்பில் வராதே; கம்பராமயணத்தில் வா என எதிர்நிலையையாயினும் இத்தகு ஒப்புகள் காப்பியங்கள் கற்கும் நிலையைத் தூண்டும் கூறுகளாம்.

3.3 பாத்திரப்பண்புகள் வழி மானுடப் பண்புகளை உணர்த்தலாம். மனிதர்கள் உருவங்களால் மட்டுமல்ல உணர்வுகளால், கருத்துக்களால் வேறுபட்டவர்கள். 'ஒருத்தருக்குத் தெரிந்தால் அது இரகசியம். இரண்டு பேர்க்குத் தெரிந்தால் அது பரசியம்'(விளம்பரம்)என்ற மலையாளப் பழமொழி. ஒவ்வொருவர் பண்புகளும், சூழல்களும் வேறுவேறாதலின் காப்பியங்களில் வரும் பல் பாத்திரங்கள், சூழல்களில் மாறுபடும் இயல்புகளின் பண்புகளை அறிவதால், மனித மனங்களின் மாறுபட்டகோணங்களைச், செயல்பாடுகளைப் புரிந்து கொள்ளலாம். இது வாழ்வை எதிர்கொள்ளும் பக்குவ நிலையைக் கேட்பவனுக்குள் உருவாக்குவதாம்.

பொறாமையால் தானும் குலமும் அழிந்த துரியோதனனைப் பாஞ்சாலி சபதத்தும்

"பாண்டவர் முடியுயர்த்தே- இந்தப்
பார்மிசை யுலவிடு நாள்வரை நான்

ஆண்டதொ ரரசாமோ-என
தாண்மையும் புகழுமோர் பொருளா மோ?"(பாஞ்சா.அழைப்.29:2);

பிறன் மனையாளை விரும்பியதால் குலத்துடன் அழிந்த இராவணனை; கணவனைக் கண்டிக்க வேண்டிய நேரத்தில் மௌனமாக இருந்தமையால், நாடுவிட்டு நாடு சென்றும் பழியுடன் கணவன் உயிர் போன அவலநிலையைக் கண்ணகியை, மனைவி மீது கொண்ட அடக்கவியலாக் காமத்தால் ஆட்சியை, உயிரை இழந்த சச்சந்தனை என வாழ்க்கையில் தவிர்க்க, குறைக்க வேண்டிய இயல்புகளையும், வாய்மை பேசல் நிலையில் துன்பங்கள் அனுபவித்தும் உறுதியாக நின்றமையால் மேனிலை அடைந்த அரிச்சந்திரன்; கணிகையர் குலத்தில் பிறந்தும் ஒழுக்கத்தில் உறுதியாக நின்றமையால்,' கற்பில் சிறந்தவள் கண்ணகியா..?மாதவியா..?என குலமகளோடு ஒப்பப் பேசும் உயர்நிலையை அடைந்த மாதவி என வாழ்க்கையில் கைக்கொள்ளத்தக்க நிலைகளைக் காட்டியும் கற்பிக்கலாம்.

3.4 இலக்குடைய வாழ்வே சிறந்தது என்பதைக் காப்பிய தலைமைமாந்தர் வழி உணர்த்தலாம். நல்லன, சிறந்தன, உயர்ந்தன செய்பவர்களே நிலையில்லா இவ்வுலகிலும் நிலைத்த வாழ்வைப் -புகழுடம்பைப் பெற முடியும். இது மாணவர்களை ஊக்குவிக்க, அவர்களிடம் தன்னம்பிக்கையைத்,தன்முனைப்பைத் தூண்ட இவ்வகையிலான கற்பித்தல் உதவும்.

3.5 காப்பியங்களில் வரும் வருணனைப் பகுதி சற்று சுவையில்லாததாய்த் தோன்றினும், நம் உலகைச் சுற்றுப்புறச் சூழலை மாணவர்கள் உணரும் வாய்ப்பாக, கருவியாக நாம் இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.காப்பியங்கள் மலை,கடல்,நாடு நகர், இருசுடர் தோற்றங்கள் எனும் இவையாவும் காப்பியங்கள் கற்பித்தல்வழி உணர்கையில் இயற்கையின்றி நாம் இல்லை; இயற்கையைக் காத்தல் நம் கடன் எனும் உணர்வு அவர்களுக்கும் எழுவதால் மாசு குறையவும், எதிர்காலச் சந்தியினர்க்கு இயற்கையின் எல்லா வளங்களும், நலங்களும் கிடைக்க வழிவகுக்குமாதலின், இவ்வருணனைப் பகுதிகளை இந்நோக்கில் மாணவர்கள் உணரும்படி கற்பித்தல் சிறப்பாம்.

3.6 இயற்கையே உலகம்; அது இங்குள்ள உயிர்கள் யாவர்க்கும் பொதுவானது; "வாழு; வாழவிடு" என்பதை உணர்ந்து உயிர்க் கருணையுடன் வாழும் உணர்வை உருவாக்கும். இதனை சீவகசிந்தாமணிப் பாடல்வழி விளக்கலாம். குரங்குகள் பாக்குக் காய்களை ஒன்றன் மீது எறிந்து விளையாட, தோற்ற ஆண்குரங்குகள் கனிகளை உதிர்க்கின்றனவாம்... அஃறிணைகளுக்கும் மகிழ்ச்சி, விளையாட்டுணர்வு உள்ளதைக் காடுவதாய் இப்பாடல் வருகின்றது.

"கண்பயில் இளங்கமு கெருத்திற் காய்பரீஇக்
கொண்டிள மந்திகள் எறியக் கோட்டிடைத்
திண்கனி முசுக்கலை சிதறும் தேம்பொழில்
மண்டமர் கடந்தவன் மகிழ்வொ டேகினான்"(சீவக.1616).

3.7 நீர் நமக்கு வளம் செய்வது; வாழ்வைத் தருவது.

"முல்லையைக் குறிஞ்சி ஆக்கி மருதத்தை முல்லை யாக்கி
புல்லிய நெய்தல் தன்னைப் பொருவரு மருதமாக்கி
எல்லையில் பொருள்கள் எல்லாம் இடைதடு மாறும்நீரால்
செல்லுறு கதியில் செல்லும் வினையென சென்ற தன்றே"(கம்ப.28).

நீரால் ஆனது உலகு. பூமியில் 71%நீரே உள்ளதாம் (நீர்-தமிழ் விக்கிப்பீடியா). எதிர்காலத் தேவைகள், மக்கட் பெருக்கம், நீரின்றி உயிர்கள் இல்லை என்றெல்லாம் கருத்துக்களாகக் கூறாமல் நீரால் உண்டாகும் வளம் உயிர்களின் மகிழ்ச்சியென கடல் ஆறு வருணிப்புகளாகக் காட்டுகையில் மாணவர்களை இயற்கை உணர்வில் ஒன்றச் செய்வதுடன், நீர் மேலாண்மை மற்றும் தேவைகளையும் உணரச் செய்கின்றன. இவ்வாறு காப்பியங்களின் கற்பித்தல் பயன்பாட்டைக் கூறிக் கொண்டே போகலாம்.

## தொகுப்புரை

செய்யுள் இலக்கிய வகைகளுள் ஒன்றாய காப்பியங்கள் மனித வாழ்வியலுடன் தொடர்புடையன. சூழல் உணர்ந்து கற்றலும், காப்பியங்கள் உணர்த்தும் செய்திகளை உணர்தலும், பாடல்களைப் பொருள், சுவையுணர்ந்து கற்றலும் அனுபவித்தலும், அணிநயங்களை உணர்தலும், வாழ்வியல் உணர்தலும், காப்பியங்கள் கற்றலைச் சிறக்கச் செய்யும். வாழ்க்கை என்பது கற்றலுடன் முடிவதில்லை. தான் உணர்ந்ததை உணர்த்தலும் வாழ்க்கையாம். காப்பியங்களைக் கற்பதற்கான தேவையை உணர்த்தினால் இயல்பாக கற்றல் மீது ஆர்வமும் வருமாதலின் அதை முதலில் தெளிவாக்க வேண்டும். 'சொல்லிக் கொடுத்த வார்த்தைகளும் கட்டிக்கொடுத்த சோறும் எவ்வளவு நாளுக்குத்தான் வரும்?' என்பார்கள். எனவே மாணவர்கள் தாமே படிக்கும் பழக்கத்துக்கு அவர்களைத் தயார் செய்தல் வேண்டும். காப்பிய மாந்தர்கள் வழி, நிகழ்ச்சிகள் வழி வாழ்க்கையை, வாழ் முறையைக் கற்பிக்கலாம். ஆக கற்றலும் கற்பித்தலும் வாழ்க்கையை உணர்த்தும் பாங்கே எனலாம்.

## முடிவுரை

கற்றலும் கற்பித்தலும் வாழ்க்கைக்குச் சுவையூட்டுவன; காப்பியங்களும் இதற்கு விதிவிலக்கு அல்ல. கவிதைகளைப் பொருளுணர்ந்து படித்தலும், படிப்பித்தலும், அவைவழி வாழ்க்கையை, மனிதர்களை, உலகை உணரச் செய்வதும், வாழ்வதுவுமே காப்பியங்களைக் கற்றல், கற்பித்தலின் பயன்களாம்.

## துணைநின்றவை

- சாமிநாதையர், உ.வே., Samynathaiyar, U.V., 2013, ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் (1-2) shree Meenakshi Sundaram pillai's History(1-2), சென்னை , டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்.
- தண்டி Dhandi 2017, தண்டியலங்காரம் Dhandiyalangaram, இராமசுப்பிரமணியம், வ.த.(தெளிவுரை) Ramasubramaniyam, V.D,(Commentary)சென்னை ,முல்லை நிலையம்.
- ஜகந்நாதன், கி.வா., Jagannathan, K.V.,1991, தமிழ்க்காப்பியங்கள்(ஆராய்ச்சி) Tamil Kappiyangal(Research), சென்னை, அமுத நிலையம் லிமிடெட்.
- காசிராஜன், இரா., Kasirajan,R., 2004, உலகக் காப்பியங்கள், World Epics, சென்னை, நியு செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட் .
- அரசுமணி, புலவர்(உரை)., Arasumani, pulavar(Commentary), 2018, திருக்குறள், Thirukkural, சென்னை, அருணோதயம்.
- கௌமாரீஸ்வரி,எஸ்.(தொ.ர்), Gowmareeswari,S. (editor), 2015, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், சென்னை, சாரதா பதிப்பகம்.
- ஞானசம்பந்தன், அ.ச., ஞானசுந்தரம், தெ., (பதி.ள்) , Gynasambandan,A.S., Gynasundaram,D., (editor), 2002, இராமாயணம், Ramayanam, சென்னை, கங்கை புத்தக நிலையம் .

- ஸ்ரீசந்திரன்,ஜெ., shreeChandran ,J.,2004, ஐம்பெரும் காப்பியங்கள் (1-5) ,Imperum Kappiyangal(1-5) , சென்னை,வர்த்தமானன் பதிப்பகம்.
- வீரன், நெல்லூர். ஆசுகவிராஜர். Veeran,Nelluoor. Asukavirajar,2001, அரிச்சந்திர புராணம், Aricchandira Puranam,சென்னை, குமார் அசோசியேட்ஸ்.
- பாரதியார், Bharathiyar, 2018, பாரதியார் கவிதைகள்,Bharathiyar Kavithaikal,சென்னை, காளீஸ்வரி பதிப்பகம்.
- சீனப் பழமொழிகள் - விக்கி மேற்கோள்கள், https://ta.m.wikiquote.org>wiki
- நீர்-தமிழ் விக்கிப்பீடியா, https://ta.m.wikipedia.org>wiki>ந..

******************

# வண்ணதாசனின் 'நாபிக்கமலம்' : உளவியல் சிக்கலும் தீர்வும்
# Vannadhasanin 'Naabikamalam' : Ulaviyal Sikkalum Theervum

## முனைவர் சி.அம்சவேணி | Dr. C. Amsaveni

தமிழ்த்துறை, இணைப் பேராசிரியர், இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (த), கோயம்புத்தூர் – 641 028. camsaveni@gmail.com, 9659444010, 9659852010

### ஆய்வுச்சுருக்கம்

இலக்கியம் பல்வேறு வகையான சமூகச் சிக்கல்களைக் களைய ஒரு கருவியாகப் பயன்படுகிறது. அது காலத்தைப் பிரதிபலிக்கும் அங்கமாக மட்டும் இல்லாமல், காலத்தைத் தாண்டி நிற்கும் நிலையான பொருண்மைகளை எடுத்துரைப்பதாகவும் அமைகிறது. அவ்வகையில் வண்ணதாசனின் நாபிக்கமலம் சிறுகதைத் தொகுப்பில் உள்ள சிறுகதைகளில் பாலியல் சிக்கல்கள் உளவியல் நோக்கில் எவ்விதம் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது என்பதைக் கற்றல், கற்பித்தல் நோக்கில் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

### Abstract

Literature has been a part of resolving social issues. It serves the purpose not only to reflect time but literature is beyond it. In Naabikamalam short stories it depicts how to overcome sexual and psychological problems. still there is no proper awareness regarding sex education. There are misconception that sex is about physical relationship alone. But i is also more about Psychological trauma. So this story is about sexual realationship interconnected with human Psychology.

**திறவுச்சொற்கள் (Keywords)** – வண்ணதாசன், உளவியல், நாபிக்கமலம், சிறுகதைகள்

### ஆய்வு நோக்கம்